gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞ ஆனிமீ உருவ (1946 ஜூலை 9 செவ்வாய்க்கிழமை) [இல உஎ

# வீரசிங்ஹள லட்சணம் இதுதானு?

## கருமம் முடித்த சேனநாயக்கா!

### அன்றுசெய்தவாக்குறுதி அனைத்தும்எங்கே?
### 8மாதத்திற்குள் சர்வாதிகாரப் பித்தா?

### இந்தியா ஒரு அரிசியும் அனுப்பவில்லையா?
### ஸ்ரீஜாத் ஆனே கொடுத்துள்ள சாட்டை

(நமது அரசியல் நிருபர்)

**ஒரு மணியும் இல்லை**

யுத்த பிற்காலத் திட்டம் ஒன்றை நமது மந்திரசபையினர் வகுத்திருக்கிறார்கள். அதாவது யுத்தம் முடிந்த பின், வேலையற்றோர்க்குவேலைதேடிக் கொடுப்பது போன்றன இத்திட்டத்தில் அடங்கும். இதில் ஓர் பிரசார உத்தியோகத்தரும் உண்டு; ஆநந்த தீஸட. சில்வாஎன்பதுஅவரின்பெயர். உருளிவெளித்தோட்டத்தில்நிகழ்ந்து வரும்சம்பவங்கள், இலஙகைஇந்தியர் பிரச்சினைஎன்னும்இன்னோரன்னவற்றைப்பற்றிஇந்தஆநந்ததீஸசில்வாஇற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் கொழும்பு வானொலி மூலமாக ஓர் பிரசங்கஞ்செய்தார். இலங்கை அரசாங்கம் இந்தியர் விஷயமாகச் செய்வது முழுவதுஞ் சரி; இலங்கை தனது உணவுப் பொருள்களுக்கு இந்தியாவை நம்பியிருக்கவில்லை. இந்தியா ஒரு மணி நெல்லாவது தந்து உதவவில்லை" என்று இந்த உத்தியோகத்தர் இலங்கை மக்களுக்குக் கூறினார். இவர்க்குப்பின், மிஸ்ரர் சேனநாயக்கா, தம் கொள்கையின் நியாயத்தை விளக்கி பாஸ்டன் கொருளேக் கூட்டத்திலும், அரசாங்க சபையிலும் கூறினார். அவற்றிலும், மிஸ்ரர் சேனநாயக்கா இந்தியாவில் இருந்து இலங்கைக்கு உணவு விஷயமாக எவ்வித உதவியும் கிடைக்கவில்லை என்று கூறினார். மிஸ்ரர் சேனநாயக்காவும், குறித்த சில்வா என்பவரும் கூறியன சரியில்லை: உண்மைக்கு மாறானவை என்று இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியான ஸ்ரீ எம் எஸ் ஆனே இப்போது ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கிறார். இலங்கைக்கு இந்தியா அன்று தொட்டு இன்றுவரை உணவுவிஷயத்தில் மாத்திரமல்ல சகல விஷயங்களிலும் உதவி புரிந்தே வருகிறது என்று புள்ளி விபரங்களுடன் ஸ்ரீ ஆனே விளக்குகிறார்.

○

**உண்மைகள்**

1943-ம் ஆண்டில் 58242 தொன் அரிசியும் 79000 தொன் வேறுதானியங்களும், 20190 தொன் கோதுமையும் 33000 தொன் சிறுதானியங்களும் இந்தியா இலங்கைக்கு அனுப்பியிருக்கிறது. 1944-ம் ஆண்டில் 9851 தொன் தானியங்கள் அனுப்பப்பட்டன. 1945-ம் ஆண்டில் 56500 தொன் அரிசி இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது. இதைவிட ஓர்தொகை சிறுதானியங்களும் கிடைத்திருக்கின்றன. இதன் பின், இந்தியாவிலே உணவுநிலை இலங்கையிலும் பார்க்கப் பன்மடங்கு மோசமாகிவிட அது தனது உணவுப் பொருள்களை அனுப்பாமல் விட்டுவிட்டது. ஆனால் சென்ற மாதம் வரவேண்டிய உணவுப்பொருட் கப்பல்கள் இங்கு வராமல்விட, உணவுநிலை மோசமாகிவிட இந்தியாவே தனது உணவுப் பொருள்களை இங்கு கடனாக அனுப்பியது. தானியவகையில் மாத்திரமன்றி, இந்த இலங்கையில் சிங்கள மக்களிற் பெரும்பாலார்க்கு இன்றியமையாத முட்டை முதலிய பொருள்களையும் இந்தியாவே அனுப்பி வருகிறது.

○

**என்ன சொல்லுவார்?**

ஸ்ரீஜாத் ஆனே வெளியிட்டுள்ள இந்த விபரங்களுக்கு மிஸ்ரர் சேனநாயக்காவும், இந்தியரைப் பகைத்துக்கொள்ள விரும்பும் ஏனையரும் என்ன பதில் சொல்லுவரென்று கேட்கிறோம் சிலரைப் பல காலத்துக்கும், பலரைச் சிலகாலத்துக்கும் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எக்காலத்தும் ஏமாற்ற முடியாது என்பதை மிஸ்ரர் சேனநாயக்காவுக்குத் தெரிவிக்கவேண்டியசடமை இலஙகை மக்களைச் சார்ந்திருக்கிறது பொறுப்பற்ற வார்த்தைகளைக் கக்கிப் பரஸ்பரம் பகையை வளர்த்தல் அரசியல் ஞானமுடையார்க்கு அழகல்ல. இந்த இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே யுள்ள தொடர்பு நேற்று இன்று உண்டானதல்ல பூர்வகாலந் தொடக்கம் உண்டானது. இங்கிலாந்தின் தயவை விரும்பி, அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட அரிவையைப்போல, சிங்களத் தலைவர் கருமம் ஆற்றுது ஏற்ற சமரசப் பேச்சு வார்த்தைகளை இப்போதே ஆரம்பித்து இந்தியா—இலங்கை பிணக்கை நீக்க வழிதேடுவாராக.

○

**சமயம் சரியில்லை**

இப்போது பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தற்குச் சமயம் சரியில்லை என்று கூறுதல் பொருந்தாது. இப்போதுள்ள இலங்கை அரசாங்கம் தான் சோல்பெரித் திட்டத்துக்கு ஆதரவு அளித்து, வருங்கால அரசியற் றிட்டத்துக்கான பேச்சு வார்த்தைகளை முடித்தது அப்படிச் செய்வதற்கு இப்போதுள்ள அரசாங்கத்துக்கு உரிமையிருக்குமானல் இந்திய அரசாங்கத்துடன் இவ்விஷயமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## கலியாணம் செய்வதற்காகச் சிங்களரான தமிழன்

சென்றவாரம் கொழும்பு நீதிஸ்தலத்தில் "தோமஸ் பெரீரா" என்னும் ஒருவர் தமது மனைவி அஸ்லின் நோனாவிடம் இருந்து விவாக நீக்கம் கோரி ஓர் வழக்குத் தொடர்ந்திருந்தார் இவர்க்காக ஏற்பட்ட நியாயவாதி ஸ்ரீ V. A கந்தையா, வாதி சிங்களப் பெயரைக் கொண்டிருந்தாலும் உண்மையிற் சிங்களர் அல்ல. அவர் ஓர் தமிழன்: அவருடைய ஆதிப்பெயர் ஜீவரத்தினம்; இந்த நோனாவைக் கலியாணம் செய்து கொள்வதற்காக தனது தமிழ்ப் பெயரைக் கைவிட்டு 'தோமஸ் பெரீரா' என்னும் பெயரை வைத்துக் கொண்டு சிங்களராகமாறினார் என்று நீதிபதிக்குஎடுத்துரைத்தார். விசாரணை நடைபெறுகிறது

# மாற்றக்கூடாது

## வாக்குச் சம்மதம் கொடுக்கும் முறை

அரசாங்கசபைத் தெரிவின்போது இப்போது வாக்காளர் தம் சம்மதத்தைத் தெரிவிக்கும் முறையை மாற்றிப் புள்ளடி போடும் முறையைக் கைக்கொள்ள வேண்டும் என்று மந்திரசபை தீர்மானித்திருந்தது இத் தீர்மானத்தை, மாத்தளைப் பிரதிநிதி மிஸ்ரர் பி. எச் அலுவிகாரை ஆட்சேபித்து ஓர் பிரேரணையை அரசாங்க சபையில் எடுத்தாண்டார். பழைய முறையை மாற்றக்கூடாதுஎன்று மிஸ்ரர் அலுவிகாரை வாதித்தார். அவருடைய பிரேரணை சரியானது என்று அரசாங்கசபை இப்போது தீர்மானித்துவிட்டது. எனவே பழைய படியே வாக்குச் சம்மதம் கொடுக்கும் முறை இருக்கும்.

# சதிகாரக் கூட்டம்

## இந்தியருடன் சிங்களரைப் பகைக்க முயற்சி?
## பதவி வேட்டுவரின் பகிரங்க ஆயத்தம்

### சேனநாயக்காவின் வேஷம் வெளித்துவிடும் என்கிறார் சமசமாஜி குணவர்த்தனு!

(நமது நிருபர்)

"இலங்கை ஓர்போதும் தனித்தியங்கமுடியாது; அதன் எதிர்கால சுபீட்சம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருப்பதிலேயே தங்கியிருக்கிறது இலங்கை தனியாக இருந்தால், இதனைத் தளமாக வைத்துக்கொண்டு வல்லமையுள்ள ஓர் அந்நிய அரசு எங்கள் தாய்நாடான இந்தியாவையே தாக்கமுடியும். பாரதநாட்டில் இருந்துவந்த நாங்கள், எவ்விதத்தாலும் பாரத நாட்டுடன் தொன்றுதொட்டுத் தொடர்புடைய நாம் அப்படியான நிலைமையை ஒருபோதும் சகிக்கமுடியாது."

இவ்வாறு இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவராய மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன சென்ற வாரம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நிகழ்ந்த ஓர் பெரிய பொதுக் கூட்டத்திற் கூறினார்.

இக்கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கான சனங்கள் சமுகமளித்தனர். மிஸ்ரர் குணவர்த்தனவே ஆரம்பத்திற் பேசினார் அவர் அரசாங்கசபை முதல்வரான மிஸ்ரர் சேனநாயக்கா கேவலம் பதவிவேட்டை ஒன்றையே பிரதானமாகக் கருதி எங்கள் தாய்நாட்டைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திடம் காட்டிக் கொடுத்துவிட்டார் என்று கண்டித்துவிட்டு மேலும் கூறியதாவது:

"தென் இலங்கையில் வகுப்புவாதம் ஒழிந்து அழிந்துவிட்டது இலங்கையில் உள்ள சகல சாதியத்தினரும் மதத்தினரும் அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளை நன்கு உணர்ந்து இப்போது தங்களுக்குள்ளே ஒற்றுமை பூண்டுவிட்டனர் மிஸ்ரர் சேனநாயக்காவும், அவருடைய கூட்டாளிகளும் இந்த யாழ்ப்பாணத்தில் வகுப்புவாதத்தைப் புகுத்த எத்தனித்தனர், அது வாய்க்காமற் போகவே சிங்களப் பொதுஜனங்களுக்கும் இந்தியத் தொழிலாளிகளுக்குமிடையே இப்போது பரஸ்பரம் பிணக்கை உண்டாக்க எத்தனித்திருக்கிறார்கள். இந்த இந்தியத் தொழிலாளிகள் இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் தலைமுறை தலைமுறையாக வசித்து வருகிறார்கள். அவர்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே எவ்விதமான குரோதமும் கிடையாது. இப்படியான பரஸ்பரம் நேச பான்மையுடன் இருக்கும் பொதுஜனங்களுக்கிடையே, குரோதத்தையும் விரோதத்தையும் உண்டாக்க ஒரு சில சிங்களத் தலைவர் முனைந்துநிற்கின்றனர்.

"ஐக்கிய தேசீயக் கட்சி என ஓர் கட்சி இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதை உங்களிற் சிலர் அறிந்திருக்கலாம். இதை ஒரு சில தனிப்பட்டவர்கள்ஸ்தாபித்திருக்கிறார்களே ஒழிய, இதற்குத் தென்னிலங்கையில் எவ்விதமான செல்வாக்கும் இல்லை; சிங்களப் பொதுஜனங்கள் இந்தக் கட்சியைப்பற்றி அவ்வளவாகச் சிந்திப்பதில்லை. அடுத்த தெரிவில் அதிகாரத்தைக் கைப்பற்றுதற்காக ஓர் சிலரால் அமைக்கப்பட்ட சூழ்ச்சிக்கட்சி அது.

"மிஸ்ரர் சேனநாயக்கா, பதவி வேட்டை காரணமாகச் செய்யும் சூழ்ச்சிகள் ஒன்றும் பலிக்கமாட்டா என்பதனையும், அடுத்த தேர்தலில் சேனநாயகாக்கட்சியில் எதிர்பாராத புரட்சிகரமான பல மாறுதல்கள் நிகழப்போகின்றன என்பதையும் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய ஞூ
ஆனிமீ உடுஉ செவ்வாய்க்கிழமை

## பிரதிநிதித் தேர்தல் பழைய முறைப்படி தான்

இலங்கை அரசாங்க மந்திரி சபையார் அரசாங்கசபைக்கு அங்கத்தவர்களை ஊரவர்கள் தேர்ந்தனுப்பும் விஷயத்தில், இதுகாறும் கைக்கொள்ளப்பட்டுள்ள நிறத்தைக் கொண்டு தேரும் முறையை விடுத்து, பிரதிநிதிகளாய் வருதற்கு முற்பட்டு நிற்போரின் பெயர்களை ஒரு பத்திரத்தில் அச்சிட்டு, எவர் யாருக்குச் சம்மதஞ் சொல்ல விரும்புகிறரோ அவர் குறித்த முற்பட்டு நிற்பவரின் பெயருக்கு நேரில் ╳இப்படி யொரு புள்ளடி யிட்டுவிட வேண்டுமென நிர்ணயித்தனர்; மேலும் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள், சம்மதஞ்சொல்லுந்தானத்திலிருக்கும் அதிகாரியிடம் தாம் சம்மதஞ் சொல்வது இன்னாருக்கென்பதை இரகசியமாகச் சொல்லிவிடல் வேண்டுமென்பதையும் மந்திரிசபையார் பிரேரித்தனர். இப்படி மந்திரிமார் முறையைமாற்றத் தொடங்கியது, இப்பொழுதுள்ள தேர்தல் முறையினல் தேர்தற் காலத்திற் பல தவறுகள் நேருகின்றனவென்ற காரணம் பற்றியாம்.

ஆனல், இந்தப் புதிய முறையினற்றான் பலதவறுகள் நேருதல் கூடுமெனவும், இப்பொழுதுள்ள முறையில் யாதாயினும் தவறுகள் நேருமேல் அவைகளைத் திருத்திக் கொள்ளலா மெனவும் ஆனதனல் இப்பொழுதுள்ள முறையைத் தவிர்க்க வொண்ணதெனவும் மாத்தளைப் பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் அலுவிகாரைமுதலிய அரசாங்கசபையங்கத்தவர் மந்திரிமார் கொண்ட நிர்ணயத்திற்கு விரோதமாக நிர்ணயித்தனர். சென்றவாரம் கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் இந்த விஷயம் எடுத்தாளப்பட்டது; "இலங்கை யரசாங்க சபை அங்கத்தவர்களைத் தேரும் விஷயத்திலாக, பாராளுமன்ற முறைபற்றி நிகழும் வேறு எந்தத் தேர்தலிலாக, இப்பொழுது கையாண்டுவரும் "நிற முறை" யான தேர்தலை எக்காரணம் பற்றியும் தவிர்க்கவொண்ணது" என்ற பிரேரணை எடுத்து ஆளப்பட்டபோது 34 அங்கத்தவர்கள் அப்பிரேரணைக்கு அநுகூலமாகவும் 10 அங்கத்தவர்கள் மாத்திரம் பிரதிகூலமாகவும் வாக்குச் சொன்னமையினல், குறித்த பிரேரணை நிர்ணயமாகி நிறைவேறியது.

தேர்தல் விஷயத்தில் இப்பொழுது கையாண்டுவரும் நிறமுறையே சனங்கள் மயக்கமின்றித் தேர்தல் செய்யத் தக்க தென்பதும், அதிக பிழைகள் நேராததென்பதும் இங்குள்ள மக்களுட் பெரும்பாலாருடைய கொள்கையாம்; இந்த முறையிலே தவறுகள் நேரவொட்டாது தடுக்க வேண்டுமாயின், தவறு செய்வோர்க்குப் பெரும் அபராதம் சிறைத்தண்டனை யென்னுமிவைகள் விதிக்கப் படுமெனப் பிரமாணத்தை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## 'காணிவல்' விழா

### சேர். துரைசுவாமி ஆரம்பித்து வைத்தார்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் "காணிவல்" விழா சென்ற 5-7-46 வெள்ளிக்கிழமை மிகவும் குதூகலத்துடன் ஆரம்பமாயது. அரசாங்க சபைத் தலைவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினதும் அதன் பல கிளைப் பாடசாலைகளினதும் மனேஜராகக் கடமை பார்த்தவரும், இக்கல்லூரி நிர்வாகசபையில் இப்போது அங்கத்துவம் வகித்துவருபவருமான கௌரவ சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் "காணிவல்" விழாவை ஆரம்பித்து வைத்தார். கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தலைவரும், வடமாகாணத் தலைவருமான ஸ்ரீ ஸி. குமாரசுவாமி அவர்கள், சேர். துரைசுவாமியை ஆரம்பித்து வைக்க வேண்டுகையில், இக்கல்லூரியும், இதன் பல கிளை ஸ்தாபனங்களும் இதுவரை அடைந்துள்ள வளர்ச்சியையும், யாழ்ப்பாணப் பட்டினத்திலே சைவ மக்களுக்குத் தனியாக ஓர் பெண்கள் கல்லூரி இல்லாக் குறையை இக்கல்லூரி அதிகாரிகள் போக்கி, இந்து மகளிர் கலாசாலை ஒன்று ஸ்தாபித்ததையும், சைவப் பெருமக்களின் தனிப்பெரும் ஸ்தாபனங்களாகிய இவற்றுக்குத் தமிழ்மக்கள் பூரண உதவியளிக்கவேண்டிய அவசியத்தையும் பற்றி விளக்கினர்

சேர். துரைசுவாமி, நம் சைவமக்களின் கலை, ஆசாரம் என்பவற்றின் வளர்ச்சி கருதி ஸ்தாபிக்கப்பட்ட இக்கலாசாலைகள் வளர்ச்சியடைவது பற்றித் தாம் அடையும் பெருமிதத்துக்கு ஓர் அளவு இல்லை என்றும், தாம் எந்நிலையில் இருந்தபோதும், இந்த மகத்தான ஸ்தாபனங்களுக்குச் சேவை புரிவதே தம் குறிக்கோளாக இருக்கும் என்றும் கூறி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

இரண்டாம்நாள் விழா ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

விழாவை ஆரம்பித்து வைக்கையில், ஸ்ரீ பொன்னம்பலம் இலங்கைத் தமிழர்க்குப் பொதுவாகவும், சைவ மக்களுக்குச் சிறப்பாகவும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை என்னும் இரு ஸ்தாபனங்களும் ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டி இந்த இரு ஸ்தாபனங்களும் இன்னும் அரிய தொண்டாற்றுவதற்குத் தமிழ்மக்கள் எல்லாரும் ஒற்றுமைபூண்டு உதவ வேண்டுமென்று குறிப்பிட்டார்.

7-7-46 விழாவை உள்நாட்டு மந்திரி ஸ்ரீ அ. மகாதேவா ஆரம்பித்து வைத்தார்.

நேற்றையவிழாவை முகாந்திரம் எஸ். குமாரசுவாமி ஆரம்பித்து வைத்தார்.

---

இலங்கைத் தேசாதிபதி சேர் மொங்ரன் மேஸன் மூர் அவர்கள் குடும்ப சகிதமாக வருகிற 18-7-46 இங்கிலாந்துக்கு லீவிற் செல்லுகிருர் அவர் மீண்டு வரும்வரை இலங்கைப் பிரதம நீதியரசராகிய சேர் ஜோன் ஹௌவார்ட் அவர்கள் தேசாதிபதியாகக் கடமை பார்ப்பார்.

# உலக அரசியல் அரங்கம்

### நாடகம் நடக்கிறது!

பரிஸ் நகரத்தில், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரூஷியா என்று நாலு வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகளின் மகாநாடு மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. அவர்கள் அவமே காலத்தைப் போக்கி வருகிருர்களேயொழிய எவ்விதமான ஸ்திரமான ஓர் கருமத்தையும் செய்வதாகக் காணவில்லை. உலகத்திலே இனிச் சமாதானத்தை ஏற்படுத்துதற்கும், இப்போது நடந்து முடிந்த யுத்தத்தில பகைவராயிருந்த நாடுகளுடன் நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் கூடிய சீக்கிரத்தில் ஓர் சமாதானமான மகாநாடு கூடவேண்டியது அவசியம் இந்த மகாநாட்டைக் கூட்டுவது யார்? இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரூஷியா, சீனம் என்னும் 5 நாடுகளுமே கூட்டவேண்டும் என்பது முந்திய ஏற்பாடு. இந்த 5 நாடுகளிலும் சீன தேசமே முதன்முதலாக ஜப்பானின் அக்கிரமிப்புக் குட்பட்டது. எனவே இந்த 4 வல்லரசுகளுடன் அதுவும் சேரவேண்டும் என்பதைச் சகலரும் ஒத்துக்கொள்ள ரூஷியா மாத்திரம் அப்படிச் சீனத்தை இதிற் சேர்க்கக்கூடாது என்று விதண்டவாதம் புரிந்து வருகிறது.

* *

### இவிச்சவாய்த்தனம்

எடுத்ததெற் கெல்லாம் எதிர்ப்புக் கூறும் ரூஷியாவை எப்படியாவது ஒருவாறு சமாதானப்படுத்திக் கருமம் ஆற்றிவிடுவோம் என்று அமெரிக்காவும் இங்கிலாந்தும், சீனத்தைப் புறக்கணிக்கும் விஷயத்தில் ரூஷியாவுடன் ஒத்துக்கொண்டன அதன் பின்னராவது கருமம் செவ்வனே நடைபெறுகின்றதா? அது தான் இல்லை! சமாதான மகாநாட்டுக்குச் சமூகமளிக்கும்படி எந்தெந்த நாடுகளுக்கு அழைப்பு விடவேண்டும் என்பதைப்பற்றி இந்த அந்நிய நாட்டு மந்திரிகள் ஆலோசிக்கத் தொடங்கினர். உடனே ரூஷியா ஓர் முட்டுக்கட்டையைப் போட்டது. நாடுகளுக்கு அழைப்பை விடுமுன்னர், இந்தச் சமாதான மகாநாடு என்ன என்ன மாதிரிக் கருமங்கள் ஆற்றும், அம்மகாநாட்டின் அதிகாரங்கள் என்ன? என்னும் இன்னோரன்னவற்றை முதலில் வரையறுக்கவேண்டுமென்று ரூஷியப் பிரதிநிதி மொலற்றவ் சாதிக்கிறர். இப்படியெல்லாம் இந்த விஷயங்களை இப்போது பேசித்தீர்க்கமுடியாதென்று மற்றப் பிரதிநிதிகள்சொல்லுகின்றனர். பழைய குருடி கதவைத்திறவடி என்றபடி இந்த மந்திரிகள் முன்நின்ற நிலைமைக்கு மீண்டும் வந்துவிட்டனர். ரூஷியாவின் இக்கொள்கை அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது.

* *

### பலஸ்தீனத்திற் கலவரம்

பலஸ்தீனத்தின் நிலைமை, சிரங்கு முற்றிப் பவுத்திரமானவாறு முற்றிவிட்டது. எல்லார்க்கும் நல்லபிள்ளையாய், "அப்பாவிப்" பட்டம் பெற முயற்சித்த இங்கிலாந்தை, இன்று யூதர் ஓர் பக்கமாகவும், அராபியர் ஓர் பக்கமாகவும் இடிக்கின்றனர் ஆயுதந்தாங்கிய யூதர்கள் பகிரங்கமாகப் பிரிட்டிஷ் படைகளைத் தாக்கிப் பெருஞ்சேதங்களை விளைத்து வருகின்றனர். பிரிட்டிஷ் படைகளும் யூதரின் இரகசிய ஸ்தாபனங்களைக் கண்டுபிடித்து அவற்றில் உள்ள ஆயுதங்களையும் ஏனைய தளவாடங்களையும் கைப்பற்றி வருகின்றனர். இதற்கிடையில் நாள்தோறும் யூதர் இரகசியமாகவும், பரகசியமாகவும் வந்து பலஸ்தீனத்திற் குடியேறுகிறர்கள் இது அராபியர்க்குப் பெரும் கொதிப்பைக் கொடுத்துவருகின்றது. தனது கொள்கைப்படி இந்த ஆண்டில் 1 லட்சம் யூதரைப் பலஸ்தீனத்திற் குடியேற்றுதற்கு அமெரிக்கா சகல உதவிகளையும் செய்யத் தயாராகவிருக்கிறது. அமெரிக்காவின் கேள்விப்படி பலஸ்தீனத்திற் சிறைவைக்கப்பட்டிருந்த யூதப் பிரமுகர்கள் விடுதலைசெய்யப்பட்டு வருகின்றனர். இப்படி நித்தியச் சச்சரவுடன் இருப்பதிலும் பார்க்கப் பலஸ்தீனத்தைப் பிரிவினை செய்து, ஓர் பக்கத்தை யூதருக்கும் ஓர் பக்கத்தை அராபியர்க்கும் கொடுத்துவிடுதல் தான் சாலச்சிறந்தது என்று முன்னர் இங்கிலாந்திலே விவசாய மந்திரியாயிருந்த மிஸ்ரர் வால்ற்றர் எலியற் கூறுகிருர்.

* *

### பிலிப்பைனுக்குச் சுதந்திரம்

இதுகாறும் அமெரிக்காவின் கீழ் இருந்த பிலிப்பைன் தீவுகளுக்குப் பூரண சுதந்திரத்தை இப்போது அமெரிக்க அரசாங்கம் வழங்கியிருக்கிறது. இவ்விஷயமாகப் பண்டிதா ஜவஹர்லால் நேரு பொதுவாகப் பிலிப்பைன் மக்களுக்கும், விசேஷமாக அங்கு வாழும் இந்தியர்க்கும் ஓர் செய்தி யனுப்பியிருக்கிருர். அது வருமாறு:—

"விடுதலை, சுதந்திரம் இவையெல்லாம் ஆசிய மக்கள் ஒவ்வொருவருடையவும், ஆசியநாடுகள் ஒவ்வொன்றினுடையவும் யுத்த கோஷங்கள் ஆகும். ஆதலால் ஆசியாவைச் சேர்ந்த எந்த நாட்டின் விடுதலையும் முன்னேற்றமும் வரவேற்கப்படவேண்டியதே. பிலிப்பைன் விடுதலைப் பிரகடனம் ஜூலை மீ 4ந் திகதியன்று செய்யப்பட்டது. இந்நாள் சுதந்திர சரித்திரத்திலேயே புனித மிக்க நாள் ஆகும். இந்த நன்னாளில்தான் அமெரிக்க நாடுகள் விடுதலையடைந்தது, அவர்கள் அதற்குமுன் கனவிலும் கண்டிராத அவ்வளவு உச்சநிலைக்கு முன்னேறினர்"

## ஆரம்பமாயிற்று

### அச்சுவேலி நில அபிவிருத்தித் திட்டம்

(நமது நிருபர்)

வடமாகாணத் தலைவர் ஸ்ரீ ஸி. குமாரசுவாமியவர்கள் சென்ற புதன் கிழமையன்று, அச்சுவேலி நில அபிவிருத்தித் திட்டத்தைஆரம்பித்துவைத்தார்.

இத்திட்டத்தின்படி, அச்சுவேலிப் பகுதியில், பண்படுத்துவாரற்றுக் கிடக்கும் "கரட்டு" நிலங்கள் பல, நவீன யந்திர சாதனங்களால் பண்படுத்திப் பயன்விளைக்கக்கூடிய பூமியாக்கப்படும்.

அப்படிப் பண்படுத்தப்பட்ட நிலங்களில், சாணி பூமி யில்லாத வறிய சனங்கள் குடியேற்றப்படுவார்கள். குடியேறியவர்களுக்கு அரசாங்கம் சகலவிதமான உதவிகளையும் செய்து அவர்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்யும்.

### மோதரையில் அம்மை நோய்

மோதரை பொலிஸ் பகுதியில் ஒருவருக்கு அம்மை நோய் ஏற்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. அம்மை நோயால் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் லூயிஸா நோனு என்ற ஸ்திரீயும் அவரோடிருந்தவர்களும் வேறிடத்துக்கு அகற்றப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணைக் கடல் போஸ்

## சுபாஷ்போஸிற்குச் சேனதிபதிப் பட்டம்! அவனுடைய முதல் வீர முழக்கம்

### "சிறையினின்றும் ஏன் தப்பினேன்'

(முற்றொடர்)

**வீர கர்ச்சனை**

வீர சிங்கமென மேடைமீதேறிய வீரன் சுபாஷ் சந்திரபோஸ், அந்த ஜனசமுத்திரத்துக்கு வணக்கத்தைச் சமர்ப்பித்தான். "எங் தாய்நாட்டு வீரச் சகோதர சகோதரிகளே" என்று விழித்ததும் அங்கு இருந்த ஒவ்வொருவரும் மயிர்க்கூச்செறிந்தனர். அவன் பின்வருமாறு வீரமழை பொழிந்தான்: "இன்று என் பாரத நாட்டிலே எனது அன்னையின் வீரப் புதல்வர்களிற் பல்லாயிரவர் காராக்கிருகத்தில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். நானும் அப்படியே அவர்களைப் போல அடைபட்டு இருக்கலாம். ஆனல் அப்படி அகிம்சையைக் கடைப்பிடித்து பிரிட்டிஷாரின் சிறைக்கூடத்தில் அடைபட்டுக்கிடத்தல் புத்திசாலித்தனமாகுமா? என்னுடைய பழைய அனுபவங்களால், இந்த அடைபட்டு வாளா கிடக்கும் முறை பயன்றராது என்று உணர்ந்தேன். உலகிலே என்ன நடக்கின்றது; உலக நிகழ்ச்சிகள் எப்படி விருவிருப்பாக நடக்கின்றன என்பதை அறிய ஆவல்கொண்டேன்! ஏன், இந்தியாவில் இருந்துகொண்டு உலக நிகழ்ச்சிகளை உள்ள உள்ளவாறு அறியமுடியாது. ஒருதலைப்பட்சமான செய்திகளே எமக்குக் கிடைத்தன. இன்னும் பிரிட்டிஷார்க்குப் பகைவராயுள்ளார், இந்தியாவின் சுதந்திர விஷயத்தில் எவ்வளவு தூரம் உதவி செய்வார்கள் என்பதை அறியவும் ஆவல்கொண்டேன். எனவே, இந்தியாவை விட்டுப் புறப்பட்டேன். ஜெர்மனிக்குச் சென்றேன். அங்கேயிருந்துகொண்டே உலக நிலைமையை நிஷ்பாதகமாக அவதானித்தேன். இந்திய சுதந்திர விஷயத்தில் அந்நிய அரசுகள் உதவிசெய்யத் தயாராக இருந்தன. தனது நாட்டின் சுதந்திரத்தைப் பெறுதற்காக அந்நியர் உதவியை நாடுதல் பிழையாகாது என்பதற்கு உலக சரித்திர சம்பவங்கள் பலவுண்டு.

**அந்நியர் ஆதரவு**

"ஐரோப்பாவிலே, பிரிட்டிஷாருடைய சைநியத்தில் இருந்து ஜெர்மனியராலும் இத்தலியராலும் சிறைப்படுத்தப்பட்ட இந்திய ராணுவத்தினரை ஓர் இந்திய தேசீய ராணுவமாக்கினேன் பிரிட்டிஷாரை எதிர்ப்பதில் மும்முரமாக அந்த ராணுவம் வேலை செய்தது! ஐரோப்பாவில் இந்திய ராணுவத்தை அமைத்து இந்தியாவுக்குக் கொண்டுவருவதிலும் பார்க்க ஆசியாவிலேயே என் சகோதரரை ஒன்றுதிரட்டி இந்திய தேசியப் படையை ஆக்கி, அதன்மூலமாக அந்நியராட்சிமீது போர் தொடுத்தல் தலைசிறந்தது என்பதை யுணர்ந்து இங்கே வந்தேன் இங்கே நான் கண்டதென்ன? என் சகோதர சகோதரிகளுக் கிடையேயுள்ள தேசபக்தி பாரதமாதாவின் விடுதலையில் ஆர்வம் என்பன என்னைக் குதூகலிக்கச்செய்கின்றன. அப்படிப்பட்ட வீரசிங்கங்களாகிய உங்களுக்குத் தலைமை வகிப்பதென்றல் அது ஓர் சாமானிய விஷயமல்ல. என்மனம் ஆநந்தமடைகின்றது. உங்கள் தலைவனாகவிருந்து ஜெபபேரிகை கொட்டி வீரசுதந்திர மாளிகைக் கிட்டுச்செல்ல எனக்குக் கிடைத்த பாக்கியமே பாக்கியம்."

**நேத்தாஜி போஸ்**

வீரன் போஸ் சேனதிபதியானர்; நேத்தாஜியானர். இந்திய தேசீய ராணுவத்தைத் திருத்தியமைப்பதில் அவர் காட்டிய சுறுசுறுப்பு என்ன? ஓர் தனி மனுஷன், இவ்வளவு சக்தியை வைத்திருக்கிறாரா என்றெல்லாம் அதிசயப்பட்டனர். எங்கும் போஸ்மயம்: இன்று இங்கே நாளைக்குப் பர்மாவில் நிற்பார். அடுத்தநாள் ஜப்பானில்; இப்படியே ஒழிவு ஓய்ச்சலின்றிப் பாடுபட்டார். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழியே என்றுங்கு, கிழக்காசியாவில் உள்ள இந்திய மக்களிடையே ஓர் புதிய உற்சாகமும் ஊக்கமும்கிளம்பலாயின. போஸ் சொன்னல் உயிரைவிட லட்சக்கணக்கானேர் தயாராக நின்றனர். ஆயிரக் கணக்கில் தேசீய ராணுவத்தில் வீரர் சேர்ந்தனர். "பசி, பட்டினி, நோய், துன்பம், மரணம் என்பவற்றை ஏற்கத் தயாராகவிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களே இந்த இராணுவத்திற் சேரவேண்டும். மற்றவர்கள் சேரவேண்டாம்" என்று அறிக்கை விட்டதோடு அமையாது பலவந்தத்தின் பேரில் எவரையும் ராணுவத்திற் சேர்க்கவொண்ணது என்று நேத்தாஜி போஸ் தன் கீழ் உத்தியோகத்தர்க்குக் கண்டிப்பான கட்டளையிட்டார். ஆசைகாட்டி ஏமாற்றவேண்டாம் என்பதே அவரின் உத்தரவு. இந்த இந்திய தேசீயராணுவம் பலவந்தப்படுத்தி ஆக்கப்பட்டது எனப் பிரிட்டிஷார் கட்டிவிட்டுள்ள வதந்தியைக் கெடுப்பதற்காகவும், இந்திய தேசீய ராணுவம் என்பது சுதந்திர வேட்கை கொண்ட பாரத வீரரை, எதுவந்தாலும் இறுதி லட்சியம் வீர சுதந்திரமே என்று பிரதிக்கினை செய்த வீர சிங்கங்களைக் கொண்டது என்பதைக் காட்டுதற்கும் இதனை இப்படி விபரித்தல் அவசியமாயிற்று.

**நேத்தாஜியின் கருணை**

எம் நேத்தாஜி கருணைக்கடல்; அவன் மற்றவர்கள் துன்பப்பட மனம்சகியான். அவனுக்குப் பெருமை சிறுமையில்லை, ஜாதிமத பேதம் இல்லை. ஓர் உண்மைக் கர்மயோகி. பழையகாலத்து பாரதநாட்டு மன்னரைப்போல. அவன் தன்கீழுள்ள மக்களின் குறைகளைத் தானே ஆராய்ந்து நிவிர்த்தித்தான். பாரபட்சம் முகமன் என்பது அவனுக்குச் சென்மசததுருக்கள். லஞ்சம் வஞ்சம் என்பவற்றைக் களைந்தெறிந்தான். இந்திய ராணுவத்தினர்க்குக் கலாசாலைகள் ஆக்கினன். அங்கே அவர்களின் அறிவை விருத்தியாக்கினன்; அவர்களுடைய உணவு விஷயத்தில் தானே ஊக்கம் எடுத்து நல்ல உணவு, நல்ல உடை கொடுக்க ஏற்பாடுகள் செய்தான். பிரிட்டிஷாரின் கீழ் வேலைபார்த்துப் பின் நேத்தாஜியின் தலைமையில் வந்துள்ள சிப்பாய்கள் "இப்படியான சலாக்கியங்களை. இப்படியானகருணையை, நம் பிரிட்டிஷாரிடம் அனுபவிக்கவில்லை' என்று கூறி எம் நேத்தாஜியை வாழ்த்தி[illegible] என்செயலாம், அடிமை இந்[illegible] வில் சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தபடியால் அவன் இன்று தலைமறைவாய் இருக்கவேண்டி ஏற்பட்டிருக்கிறது; சுதந்திர இங்கிலாந்து அல்லது அமெரிக்காவில் எங்கள் நேத்தாஜி பிறந்திருப்பானேயானல் இன்று அவன் அகில உலகிற்கும் அதிகாரியாய்

# இந்தியத் துணிகள்

## இனி, வருவது குறையுமா?

### மோசமான நிலைமை ஏற்படலாம்

தனக்கு எந்த நாடுகள் உணவுப் பொருள்களை அனுப்புகின்றனவோ, அந்த நாடுகளுக்குத்தான் துணிகளை ஏற்றுமதிசெய்து உதவிசெய்ய முடியுமென இந்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக ஓர் செய்தி கூறுகிறது, இந்த முடிவு நடைமுறையில் வருமானல், இலங்கைக்கு இனி இந்தியாவிலிருந்து துணிகள் கிடைக்காமற்போகலாம், உணவுப் பொருள்கள் தரும் நாடுகளுக்குச் சலுகை காட்டவேண்டியது அவசியந்தான். ஆனல் இதுகாறும் எம்முடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்த நாடுகளையும் கைவிடக்கூடாது இந்த நெருக்கடி முடிந்ததும், நாம் அந்நாடுகளுடன் மீண்டும் வர்த்தகத் தொடர்பு ஏற்படுத்த வேண்டும். எனவே துணிகள் அனுப்புவதை முற்றுக ஒழிக்காமல், கொஞ்சமாவது இந்நாடுகளுக்கு அனுப்பியே வரவேண்டும் என ஓர் இந்திய அதிகாரி இந்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்.

இந்தியாவிடம் இருந்து தனக்கு இவ்விஷயமாக எத்தகைய தகவலும் கிடைக்கவில்லை என்றும், இத்தீர்மானத்தை இந்தியா அமுல் நடத்தினல் இலங்கையில் துணி நிலைமை மோசமாகிவிடுமென்றும் இலங்கைத்துணிக் கட்டுப்பாட்டதிகாரி மிஸ்ரர் எட்மன்ட் றெட்றிக்கோ கூறுகிறார்,

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

கரவை, மாணிக்கவாசக விதாலயத்தில் 3-7-46 புதன்கிழமை ஷ குருபூசை மிகச் சிறப்பாக நடைபெற்றது காலை 10 மணி தொடக்கம் கடவுள் வழிபாடு, சிவபுராணம் முதலாய திருவாசகமோதுதல் என்பன நிகழ்த்தப்பெற்றன. பகல் 12 மணியளவில் குருபோசனம், ஷ யூரிலுள்ள சைவாபிமானிகள் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருஞ் சேர்ந்துள்ள யாகேசுர பூசை நடைபெற்றது பிற்பகல் 3 மணியளவில் முதலியார் திரு. சி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் பண்டிதர் திரு. க சிற்றம்பலம் அவர்களால் 'மாணிக்கவாசக சுவாமிகளும் திருவாசகமும்" என்னும் பொருள்பற்றி அரியவோர் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. திரு சி. ஆழ்வாப்பிள்ளை, ஆசிரியர் சி. செல்லையா ஆதியோர் குறிப்புரை பகர்ந்தனர். தலைவர் முடிவுரையோடு பிற்பகல் 5 மணியளவில் நிறைவேறியது.

—கடித

## 10 கோடி டாலர் நட்டஈடு

யுத்தத்தில் ஏற்பட்டுள்ள நட்ட ஈடாக இத்தலி ருஷியாவுக்கு 10 கோடி டாலர் 7 வருஷத் தவணையில் கொடுக்க வேண்டும் என்று பாரிஸிற் கூடிய அந்நியநாட்டு மந்திரிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## அநுராதபுரத்திற் பேதி நோய்

அநுராதபுரம் நகரசங்க எல்லைக்குள் பேதிநோய் பரவி வருகிறது

அகிலத்தும்பர்களைக் காத்துப் புரக்கும் செங்கோல் மன்னனய் விளங்கியிருப்பான்! எம்மன்னையின் அடிமைத்தளை அறுவதென்னுள்! எமது இதயத்துக் குடிகொண்டிருக்கும் அண்ணல், தன் அஞ்ஞாத வாசத்தினின்றும் வெளிவருவதென்னுள்? நாற்பதுகோடி பாரத மக்களும் கண்டு களிப்பதெந்நாள்! ஜெய!ஜெய!வீராதி வீர ஜெயஜெய! என்று அந்தரத்து வானவர் அவனுக்குப் பூமாரி பொழிந்து வாழ்த்துவது எந்நாள்!

(வரும்)

# ஆசிரியர் வேதனம்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா,

புதிய வேதனத் திட்டம் அங்கீகரிப்புக் கொண்டுவரப்பட்ட நாள் தொடக்கம் இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்குள் திருப்தியீனமும் கிளர்ச்சியும் உண்டாகியிருக்கிறது. இத்தீவின் எப்பகுதியைப் பார்த்தாலும் ஆசிரியரோ பொதுசனங்களோ ஒரே கிளர்ச்சிக் கூட்டம் நடத்துகிறார்கள் அக்கூட்டங்களில் ஆசிரியருக்குக் குறிக்கப்பட்ட வேதனம் நீதியற்றதென்று கண்டிக்கப்பட்டு வருகின்றது.

ஆசிரிய வேலை உன்னதமானதுதான். ஆனல் ஆசிரியருக்கோ, 'உண்பதற்குக் காற்றும், உடுப்பதற்கு முகில்களும்" போதுமானவைஎன்று நினைக்கலாமா? 35099 க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் நன்மையைக் கவனிப்பதற்கு நிலைபரமான ஸ்தாபனம் ஒன்றுமில்லை 1919ம் ஆண்டில் இங்கிலாந்தில் இந்த நோக்கத்திற்காக ஒரு காரிய சங்கம் அமைக்கப்பட்டது. அதன்மூலமாய் (Burnham) பேண்ஹாம் வேதனத் திட்டம் ஒன்று 1921-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. பேண்ஹாம் பிரபு இறக்கும்வரைக்கும் (அதாவது 1933-ம் ஆண்டுவரைக்கும்) அவரது அரிய தலைமையின்கீழ் இச்சங்கம் நடைபெற்று வந்தது. அதன்பின் ஒன்ஸ்லோப் பிரபு தலைவராயிருந்துவந்தார். தற்போது சோல்பரிப் பிரபு தலைவராயிருக்கிறார். ஆகையால் இங்கிலாந்திலிருக்கும் சங்கத்தைப் போல் ஒரு காரியசங்கம் இலங்கையிலும் அமைக்கவேண்டும் அது கல்வி மந்திரியின் அங்கீகாரம் பெற்றதாயிருக்கவேண்டும். இங்கிலாந்து - உவேல்ஸ் கல்வி ஒழுங்கு சம்பந்தமாய் 1944ம் ஆண்டு ஆவணி மாதம் 3ம் திகதி நிறைவேறிய கல்வித் திட்டம் 89ம் பிரிவில் கூறப்பட்டதை இத்தருணத்தில் கூறுவது நலமென நினைக்கிறேன்.

1. "ஆசிரியரின் வேதனத்தைத் திட்டப்படுத்துவதற்காய், கல்வியந்திரி காரிய சங்கம் அல்லது சங்கங்களைநியமிக்கவேண்டும் அது அவ்வவ்விடங்களிலுள்ள கல்வி அதிகார சங்கங்களினதும், ஆசிரியர் சங்கங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்டதாய் இருக்கவேண்டும். இக் காரியசங்கம், கல்வி மந்திரியின் வேண்டுகோளின்படி அல்லது தகுந்தது என்று தான் நினைக்கும் நேரத்தில் ஆசிரியர் வேதனத் திட்டமுறையொன்று தயாரித்து மந்திரிக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இந்தத் திட்டம் கல்வி மந்திரியின் அங்கீகாரம் பெற்றபின் அமுலுக்கு வரவேண்டும். அதன்பின் அந்தந்த இடங்களில் கல்வி அதிகார சங்கங்கள் குறித்த திட்டத்தின்படி ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கச்செய்வதற்கு எற்றபிரமாணத்தை மந்திரி கட்டளையிடவேண்டும்."

இங்கிலாந்து முறையைக் கைக்கொள்வதே நீதியும் புத்தியுமுடைய செய்கை,

இங்ஙனம்
தங்களன்புள்ள
**P. சவரிமுத்து**

சம்பத்திரிசியார் தெரு,
யாழ்ப்பாணம், 26 6-46.

## அரிசி வருகிறது

சென்ற 3ம் திகதி 7500 தொன் அரிசியுடன் ஓர் கப்பல் கொழும்புக்கு வந்தது. 11-ம் திகதி 9000 தொன் அரிசியுடன் இன்னேர்கப்பல் வரும். எகிப்திலிருந்து வேறும் ஓர் கப்பல் பெருந்தொகையான அரிசியுடன் சமீபகாலத்தில் கொழும்புக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விளம்பரம்

கிளிநொச்சி (கலனி) குடியேற்றத்தில் பத்து வீடுகள் கட்டும் பொருட்டு கதவுகளும், யன்னல்களும் (முடிவுறக்) கொடுப்பதற்கு, 1946ம ஆண்டு ஆடி மாதம் (யூலை) 18-ந் திகதி பகல் 12 மணிவரைக்கும், வடமாகாண அரசாட்சி ஏசண்டர் ரெண்டர்கள் ஏற்றுக்கொள்வார். ரெண்டர் போம்கள் வடமாகாண அரசாட்சி ஏசண்டருக்கு விண்ணப்பஞ் செய்து, ஒவ்வொன்றுக்கும் ரூபா 10 வீதம் பணங் கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். வேறு விபரங்களும் யாழ்ப்பாணக் கச்சேரியிற் பெற்றுக்கொள்ளலாம்.

G 38 9.7.46.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரசிங்ஹள லட்சணம் இதுதானு

முதலாம்பக்கத் தொடர்ச்சி

ஏன் உரிமையில்லை என்று இலங்கை இந்தியக் காங்கிரஸ் கேட்பதில் எவ்விதமான தவறும் இல்லை. இப்போது இந்தியாவில் நிரந்தரமான அரசாங்கம் இல்லாவிட்டால், பின் அங்கே ஏற்படப்போகும் அரசாங்கத்துடன் அதனைச் செய்து முடிக்கலாம். அதற்கிடையில், இலங்கை அரசாங்கத்தார், இலங்கை இந்தியக் காங்கிரசுடன் ஓர்வித ஒழுங்கு வரலாம். ஏன்? இவ்விஷயம் இலங்கை வாழ் இந்தியரைத்தான் பாதிப்பது! இலங்கை இந்தியக்காங்கிரசும் இலங்கை யரசாங்கமும் ஏற்படுத்தும் எந்த ஒழுங்கையும், இந்திய அரசாங்கம் அது எப்போது ஏற்பட்டாலும் ஏற்றுக்கொள்ளும் என்பது நிச்சயம்

○

### இதற்கிடையில் மறதியா?

சோல்பரித் திட்டத்தை ஏற்பதா நிராகரிப்பதா என்ற பிரச்சினை இற்றைக்கு 8 மாதங்களுக்குமுன் விவாதிக்கப்பட்டபோது, பொதுவாகச் சிறுபான்மையினரதும் விசேஷமாக இலங்கை இந்திய மக்களதும் ஆதரவைக்கோரி மிஸ்ரர் சேனுநாயக்கா கூறிய உருக்கமான மொழிகளை இச்சந்தர்ப்பத்தில் அவருக்கு ஞாபகமூட்டுதல் பொருத்தமுடைத்தாகும். "எங்கள் தாய்நாடாகிய பாரதகண்டத்தின்மீது எங்களுக்குள்ள வாஞ்சை எத்தகையது என்பது எவரும் அறிந்ததாகும். இவ்விஷயத்திற் சிலர் சந்தேகங்கொள்வது எமக்கு எவ்வளவோ கவலையைக் கொடுக்கிறது. இந்தியர்கள்மீது நாம் குரோதங்கொண்டு, அவர்கள் இங்கு வருவதை வெறுக்கிறோம் என்ற ஓர் தப்பபிப்பிராயம் ஒருசிலர் மனத்தில் இருக்கிறது. எங்களுக்கு அப்படியான எண்ணம் - அதாவது பாரத நாட்டு மக்கள் இங்கு வராமற் தடுக்கும் நோக்கமோ, அவர்கள் விஷயத்தில் இடையூறுகள் செய்யும் நோக்கமோ - இம்மியளவேனும் இல்லையென்பதை இலங்கைவாழ் இந்திய மக்களுக்கு உறுதியாக நான் கூறுகிறேன். நாங்கள் பாரத மக்களைக் கௌரவிக்கிறோம். ஆரியநாட்டு மக்களை நேசிக்கிறோம். அவர்கள் ஆற்றிவரும் செயல்களுக்காக அவர்களை நாங்கள் மெச்சிவருகிறோம். அது மாத்திரமா? எங்கள் விஷயங்களுக்கு அவர்களிற் பலரை எதிர்பார்க்கிறோம். அந்தப் பாரதபூமியில் தலைசிறந்த புருஷனுக எவர் விளங்குகிறாரோ, அவரிடம் நான் போவேன்: எங்கள் பிரச்சினைகளை அவர்க்கு கூறுவேன். அவர் தீர்ப்புப்படி நடப்பேன்" என்று பரக்கப்பேசிய மிஸ்ரர் சேனுநாயக்கா, இந்த 8 மாதகாலமாகியும் செய்து முடித்த கருமங்கள் என்ன? அன்று கூறிய உறுதிமொழிகள் யாவும் எங்கே? இன்றுவரை இலங்கை -"இந்தியப் பிரச்சினையை அந்தத் 'தலைசிறந்த புருஷ'ரிடம் மிஸ்ரர் சேனுநாயக்கா சமர்ப்பித்தாரா? தன் கருமத்தைச் சாதிப்பதற்காக அன்று இந்தியமக்களின், இலங்கைத் தமிழ் மக்களின், சிறுபான்மையினரின் காலைப்பிடித்து, கையைப்பிடித்த சேனுநாயக்கா, இன்று சூரத்தனம் நாட்ட முற்படுதலும், "வீரசிங்ஹள" லட்சணங்களில் ஒன்றுதானு என்று கேட்கிறேன்!

## சதிகாரக் கூட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்போது புகுத்தப்பட்டுள்ள சோல்பெரித் திட்டத்தின்படி மந்திரசபை ஆட்சிமுறை நிலவும். இதில் லஞ்சம், வஞ்சனை எல்லாம் சம்பூர்ணமாக நிகழலாம்: யுத்தகாலத்தில் ஊர்ப் பாதுகாப்புப் பகுதியால் செலவழிக்கப்பட்ட பணத்துக்குக் கணக்குக்காட்ட இவர்கள் மறுக்கவும் கூடும். அப்படியான கணக்குகளை மெல்லவாக மறைக்கவும்கூடும். சேர். ஒலிவர் குணத்திலக, பந்தயக் குதிரைகளைத் தெரிவதில் மகா சமர்த்தர். ஆனால் ஆடுமாடுகளை வாங்கும் உத்தியோகத்தரைத் தெரிந்ததில் அவர் அவ்வளவு திறமையைக்காட்டவில்லை. (சேர். ஒலிவர் ஊர்ப் பாதுகாப்பு அதிகாரியாயிருந்த காலத்தில், திறமையற்ற ஒருவரை ஆடுமாடுகளை வாங்கிப் பராபரித்து விநியோகிக்கும் உத்தியோகத்தராகத் தெரிவு செய்த விதமும், அவ்வுத்தியோகத்தர் ஆற்றிய ஊழல்களும் ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன;)

"இலங்கை அரசாங்கத்தின் கணக்குப் பரிசோதனைப் பகுதிக்கு ஆபிரிக்காக் காட்டிலிருந்து ஏன் ஓர் உத்தியோகத்தரைத் தெரிவு செய்ய வேண்டும்? இந்தச் சதிகாரக் குழாம் மறைக்க முயற்சிக்கும் ஏதோ இரகசியம் ஒன்று உண்டு.

"யாழ்ப்பாணம் விஷயமாகச் சொல்லுகில், இங்கேயுள்ள மக்கள் அரசியலில் என்ன கொள்கையைக் கடைப்பிடிப்பது என்று இன்னும் முடிவு செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். அனுபவமும் அறிவும் ஆற்றலும் உடைய தலைவர்கள் இவ்விஷயத்தில் எவ்வித முடிவான அபிப்பிராயமும் இன்னும் இங்கே கூறவில்லை."

மிஸ்ரர் குணவர்த்தனவின் பிரசாரணத்தின்பின், ஸ்ரீமான்கள் வி. தர்மகுலசிங்கம், V. சோமசுந்தரம், P. M. வேல்சாமி, P நாகலிங்கம் முதலியவர்களும் பேசினர்.

## தொகுதி நிர்ணயக் கொமிஷன்

கொமிஷன் பகிரங்க மகாநாடு கீழே கொடுத்தவண்ணம் கூடும்.

காலி சுங்கக் கந்தோர்

12 7-46 வெள்ளிக்கிழமை மு ப 9 மணி
13-7-46 சனிக்கிழமை மு ப 9 மணி

இரத்தினபுரி, உவேஸ் ஞாபகசின்ன மண்டபம்

1:-7-46 திங்கட்கிழமை மு ப 9 மணி

கண்டி, பட்டின மண்டபம்

22-7 46 திங்கட்கிழமை மு ப 9 மணி
23 7-46 செவ்வாய்க்கிழமை மு ப 9மணி

குருநாக்கல் நகரசபை மண்டபம்

24-7-46 புதன்கிழமை மு ப 9-30 மணி

வதுளை பட்டின மண்டபம்

29-7-46 திங்கட்கிழமை மு ப 9-30மணி

மட்டக்களப்பு அர்ச். மைக்கேல் மண்டபம்

31-7-46 புதன்கிழமை மு ப 9 மணி
1-8 46 வியாழக்கிழமை

ஈ. ஆர். சட்பெறி
ஆர். எல். புரூகியர்.
தொகுதி நிர்ணயக் கொமிஷன் காரியதரிசிகள்

8—7—46

G 39—9.7.46


## கண்கவர் காட்சி! காணிவல் மாட்சி!

இந்த இலங்கையில் எத்தனையோ காணிவற்காட்சிகளும் பொருட்காட்சிகளும் நடந்துவிட்டன
எதுவும் இக்காட்சியை வென்றதுமில்லை; வெல்லப் போவதும் இல்லை!

அத்தகை யற்புத வித்தகக் காட்சி!

பூவுலகில் இந்திரலோகம் தான் வந்ததோ என ஐயுறத்தக்க
கோடிசூரியப் பிரகாச நகரத்தைக் கண்டுகளிக்க வாருங்கள்!

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில்

பாலர்க்கேற்ற பலவகை ஆட்டங்கள்! விருத்தர் மகிழும் விதவித வைபவம்!
ஆடவருவக்கும் ஆனந்தக்காட்சிகள்! மங்கையர்விரும்பும் மனோகரப் பொருள்கள்!

பொருட்காட்சிகள் ஒன்றா? இரண்டா?

அரசாங்கத்தார், வர்த்தகர், விவசாயிகள் எல்லோரும் போட்டியிடும் பொருட்காட்சிகள்

எது எது வேண்டுமோ அது அதைக்காண அரிய சந்தர்ப்பம்

நவரசந்ததும்பும் நாடகக்காட்சிகள்! சங்கீதவாணரின் தனிப்பெரும் விருந்து!
சர்க்கஸ் ஆட்டங்கள்! பரதநாட்டியம்! பலவகை இந்திய - இலங்கை நடனங்கள்!

ஆசிரியர்களே! நீங்கள் உங்கள் மாணவர்களுக்குக் கிரியை முறையிற் போதிக்க, ஓர் அரிய சந்தர்ப்பம்! கலை, சாஸ்திரம், சித்திரம், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட அநேக காட்சிகள் இங்கு நிகழும். அவற்றுக்கு உங்கள் மாணவர்களைக் கொண்டுவந்து காட்டுங்கள்!

## ஜூலை மாதம் 5உ தொடக்கம் 15உ முடிய நடைபெறும்

பாரதநாட்டின் சங்கீதப் பொக்கிஷம், மதுரகீதவாணி

### என். ஸி. வஸந்தகோகிலத்தின்

அமி[illegible]கானத்தை நீங்கள் கேட்கவேண்டாமா?

அது எப்போது? திகதியை எதிர்பாருங்கள்

நமது தமிழ்ப் பெருமக்களின் தனிப்பெரும் ஸ்தாபனங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும், இந்துமகளிர் கல்லூரியும். இந்தப் பொருட்காட்சி, "காணிவ"லிற் சேரும் பணம் முழுவதும் இந்த ஸ்தாபனங்களுக்கேயாகும். எனவே. சைவம் தழைக்க, தமிழ்ஓங்க, எம்நாடு முன்னேற வந்து உதவுங்கள்! உதவுங்கள்!

(Mis 100 ?—15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### போய்விட்டார்கள்

மூன்றுமாதத்திற்கு மேலாக இந்தியாவில் நின்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு இங்கிலாந்து திரும்பிய மந்திரிகள் கோஷ்டி லண்டனை அடைந்துவிட்டது! மூன்றுமந்திரிகளும்சென்ற வியாழக்கிழமைநிகழ்ந்த பிரிட்டிஷ்மந்திரசபைக்கூட்டத்திற்பிரசன்னமாகவிருந்தனர். பிரதம மந்திரி அற்லிக்கு அவர்கள் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமுன்னர் கொஞ்சக் காலத்திற்கு ஓய்வெடுத்துக் கொள்ளுவர். பிரிட்டிஷ் மந்திரசபையினரின் சார்பாக குறித்த மூன்று மந்திரிகளும் இந்தியாவுக்குச் சென்று நிகழ்த்திய கருமங்களைப் பாராளுமன்றத்துக்கு விபரமாகக் கூறவேண்டும் என்றும் இவ்விஷயமாக விவாதத்துக்கென ஓர் நாளை ஒதுக்கி வைக்கவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரான மிஸ்ரர் சேர்ச்சில் பிரதம மந்திரியைக் கேட்டிருக்கிறார்.

●

### காங்கிரஸ் பாராளுமன்றம்

காங்கிரஸ் மகாசபையின் பாராளுமன்றம் எனப்படும் காங்கிரஸ் 'கமிற்றி' சென்ற சனிக்கிழமை பம்பாய் நகரில் மௌலானா அசாத் தலைமையிற் கூடியது. பாரத நாட்டின் பலபாகங்களிலுமிருந்து பிரதிநிதிகள் சமுகமளித்தனர். இதுகாறும் காங்கிரசின் மாபெரும் தலைவராயிருந்த மௌலானா அசாத், தலைமைப் பதவியைப் பண்டிதர் ஜவஹர்லாலுக்கு அளித்து ஆசி கூறினர். புதிய தலைவரான பண்டிதர் நேரு, மௌலானா அபுல்கலாம் அசாத அவர்கள் இந்த 5 ஆண்டு காலமாகக் காங்கிரசின் தலைவராகவிருந்து பாரதநாட்டுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டிப் பேசினர். இன்று பாரதநாடுசுதந்திர மாளிகையின் வாசற்படியில் நிற்கிறதென்றால் அதற்குக் காரணபூதராகவிருப்பவர் மௌலானா அசாத் தான் என்று பண்டிதர் ஜவஹர்லால் அவர்கள் பாராட்டிப் பேசினர்.

●

### அபேதவாதிகள் எதிர்ப்பு

பிரிட்டிஷ் மந்திரிகள் வகுத்துள்ள நீண்டகாலத் திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்ததைக் காங்கிரசில் உள்ள தீவிர வாதிகள் ஆட்சேபிக்கின்றனர். அரசியல் நிர்மாண சபைக்குக் காங்கிரசைச் சேராத சில பிரமுகர்களையும் அனுப்பவேண்டும் எனக் காங்கிரஸ் அதிகாரபீடம் தீர்மானித்ததையும் இவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அரசியல் நிர்மாண சபையின் வேலை மிகவும் முக்கியத்துவமானது. உண்மையில் திறமையானவரைக்கொண்டு கருமம் ஆற்றவேண்டுமேயன்றி இதிற் கட்சிபேதம் பாராட்டவொண்ணாது என்பதே காங்கிரஸ் அதிகாரபீடத்தின் கொள்கையாகும். எது எப்படியிருந்தபோதும், காங்கிரஸ் அதிகாரபீடம் வகுத்துள்ள ஒழுங்குகளை காங்கிரஸ் கொமிற்றி அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கலாகும். இக்கொமிற்றிக்குச் சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களாவன:—

1. மூவர் திட்டத்தின் நிரந்தர ஏற்பாடு சம்பந்தமாக டில்லியில் காங்கிரஸ் காரியக்கமிட்டிசெய்த முடிவை ஊர்ஜிதம் செய்தது.

2. தென்னாப்பிரிக்க இந்தியர் எதிர்ப்புச் சட்டத்தையும், சத்தியாக்கிரகிகள்மீது நடைபெறும் 'வெள்ளையரின் சண்டித்தனத்'தையும் பலமாகக் கண்டனம் செய்தது. தெ.ஆ இந்தியர்கள் தங்கள் பிரஜா உரிமைகளைப் பெறுவதற்காக ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரகத்தை இசதீர்மானம் ஆதரிக்கிறது. மேலும் தெ. ஆ. இந்திய சத்தியாக்கிரகிகளுக்கு நீதி வழங்கப்படுவதற்காக இராசப் பிரதிநிதியும் பிரிட்டிஷ் அரசினரும் தங்கள் செல்வாக்குகளைப் பிரயோகிக்க வேண்டுமென இத்தீர்மானம் கோரிக்கொண்டது.

●

### வகுப்புக் கலவரங்கள்

வங்காளத்தில் உள்ள டாக்காவிலும், ஆமதாபாத் நகரத்திலும் வகுப்புக் கலகங்கள் தாண்டவமாடிப் பல்ரை இறக்கச் செய்துவிட்டன, டாக்காவில் முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர். டாக்காவில் இதுவரை 6 பேர் கொல்லப்பட்டனர். இந்த இரு நகரங்களிலும் அமைதியை நிலவச்செய்தற்கு ஹிந்து—மூஸ்லீம் தலைவர்கள் முயற்சி செய்கின்றனர். இப்போது நிலைமை ஓரளவுக்கு அபிவிருத்தி யடைந்திருக்கிறது.

●

### காஷ்மீரப் பிரச்சினை

நேற்று காஷ்மீர் பிரதம மந்திரி ராவ்பகதூர் ராமச்சந்திர கக், சர்தார் படேலைச் சந்தித்து காஷ்மீர் நிலைமை பற்றிச் சம்பாஷித்தார். அவர் ஆஸாத்தையும் பிரபல காங்கிரஸ் தலைவர்களையும் சந்தித்தார். காஷ்மீர் சமஸ்தானத்தில் நேருஜிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை அகற்றப்படுவதில் இச்சம்பாஷணைகள் பயனளிக்குமெனத் தெரிகிறது. நரேந்திர மண்டலத் தலைவர் போபால் நவாப் இவ்விஷயத்தில் தமது செல்வாக்கைப் பிரயோகிப்பாரெனத் தெரிகிறது.

●

### ஐரோப்பியரின் நல்ல தீர்மானம்

அரசியல் நிர்மாணசபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில், வங்காளம், அஸாம், சென்னை முதலாம் சட்டசபைகளில்உள்ள ஐரோப்பியப் பிரதிநிதிகள பங்குபற்றக் கூடாது என்று காங்கிரசும் மகாத்மாகாந்தியும் வாதிட்டனர் ஐரோப்பியர் இந்தியாவில் அந்நியர். எனவே, இந்திய நாட்டு அரசியல் நிர்மாணத்தில்அவர்கள் பங்குபற்றிப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் தம் வாக்குரிமையைச் செலுத்தக்கூடாது என்பதே காங்கிரசின் கொள்கை. இதன் பயனாகப்போலும் வங்காளச் சட்டசபையில் உள்ள ஐரோப்பியப் பிரதிநிதிகள், அரசியல் நிர்மாணசபைக்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்வதில் தாம் பங்கெடுத்துக்கொள்வதில்லை என்று தீர்மானித்துவிட்டனர். ஏனைய மாகாணங்களின் ஐரோப்பியப் பிரதிநிதிகளும் இப்படியே செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### காகிதக் கட்டுப்பாடு இன்னும் ஒருவருஷத்துக்கு இருக்குமாம்

தற்போதுள்ள காகிதக் கட்டுப்பாட்டை நீக்கவேண்டும் என இலங்கை மந்திரசபையினர் தீர்மானித்தனர். இதனை ஆட்சேபித்து, கடுதாசிக் கட்டுப்பாட்டதிகாரி கைத்தொழில் நிருவாகசபைக்கு ஓர் மநுவைச் சமர்ப்பித்தார். அதில், இந்தக் கட்டுப்பாட்டை நீக்கக் கூடாது என்று அவர் வற்புறுத்தியுள்ளார். கைத்தொழில் நிர்வாகசபை அவருடைய மநுவை ஆராய்ந்து, அவர் கூறியபடி காகிதக் கட்டுப்பாட்டு முறையைத் தொடர்ந்து இன்னும் ஒரு வருஷத்துக்கு வைத்திருக்க வேண்டும் எனத் தீர்மானித்திருக்கிறது.

### இலங்கையில் பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதி

இலங்கையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வர்த்தகப் பிரதிநிதியாக மிஸ்ரர் [illegible] வர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# சமசமாஜிகள்

### தொழிலாளரை ஒன்றுபடுத்த முயற்சி

இலங்கை சமசமாஜக் கட்சியின் 6-வது வருடாந்த மகாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நகர மண்டபத்திற் கூடியது. டக்ரர் என் எம் பெரீரா தலைமைவகித்தார். பல தீர்மானங்கள் இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. நிலமில்லாத விவசாயிகளுக்கு அரசாங்கம் நிலமும், விதைகளும் கொடுத்து உதவி செய்யவேண்டும என்றும், மிஸ்ரர் சேனநாயக்காவின் குடியேற்றத்திட்டம் மிகவும் பிழையானது என்றும், இந்தியரை நாடுகடத்த அவர் செய்யும் முயற்சிகள் அபாயகரமானவை என்றும் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

இன்னும் மிஸ்ரர்சேனநாயக்காவினால் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி தொழிலாளிகளுக்கு விரோதமானது எனவே, அதனைப் புறக்கணித்து, இலங்கையில் உள்ள தொழிலாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தொழிலாளர் இயக்கத்தைப் பலப்படுத்தி அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றித் தொழிலாளர் சுபீட்சத்துக்கு உழைக்கவேண்டும் என்றோர் தீர்மானமும் நிறைவேறியது.

### தொகுதி நிர்ணயச்சபை

இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் பாராளுமன்றத்துக்கான தேர்தற்றொகுதிகள் எவ்வாறு இருக்க வேண்டும என்பதைப்பற்றி விசாரித்தறிவதற்காக நியமிக்கப்பட்ட சபை சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் கூடித்தனது விசாரணையை ஆரம்பித்தது.

முதன்முதலாக யாழ்ப்பாணச் சங்கத்தின் சார்பாக நியாயவாதி ஸ்ரீ A. V குலசிங்கம் சாட்சியம் கூறினர் அவர் வடமாகாணத்தில் (1) மன்னார்த் தொகுதி, (2) முல்லைத்தீவு வவுனியாவைக்கொண்டு ஓர்தொகுதி,(3) கரைச்சி, பச்சிலைப்பள்ளி,துனுக்காய், பூநகரி தென்மராட்சி என்பவற்றைக் கொண்டஓர்தொகுதி, (4)வடமராட்சித் தொகுதி, (5) யாழ்ப்பாண நகர எல்லைக்குட்பட்டதொகுதி, (6)வலிகாமம் மேற்குத் தொகுதி. (7) வலிகாமம் கிழக்கும், யாழ்ப்பாணம் மணியகாரன்பகுதியில் ஓர் பிரிவுமான தொகுதி,(7)வலிகாமம்வடக்குத்தொகுதி, (9) தீவுப்பகுதி. ஆக 9 தொகுதிகள் இருக்கலாம என்று கூறினர்.

மிஸ்ரர் J. D. ஆசீர்வாதம் என்பவர் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் சார்பாகவும், முதலியார் A, B. ராஜேந்திரா என்பவர் சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றச் சங்கம் சார்பாகவும் ஸ்ரீ P. சின்னத்துரை, கட்டுடைக் கமக்காரர் சங்கச் சார்பாகவும் சாட்சியம் கொடுத்தனர்.

### மழையில்லை

இந்த யாழ்ப்பாணப்பிரிவிலேஇடையிடையே மழை தூறியதெனினும் சிறுமழை பெய்ததெனினும் ஏழுமாசகாலமாகப் பெருமழை பெய்யாதொழிந்தது' இதனல் இங்குள்ள மரஞ்செடிகொடி வர்க்கங்களெல்லாம் வாடியபடி காணப்படுகின்றன; பலவகையான ரோகங்கள் ஊரிற் பரவுகின்றன; இங்குள்ள மக்கள் எந்தநேரமும் மழையை எதிர்பார்த்த வண்ணமே யிருக்கிறார்கள்; ஆனால் யாழ்ப்பாணத்திலே இக்காலத்தில் நடக்கும் விபரீதங்களை யோசிக்கும்போது மழைபெய்யக் காரணமில்லை [illegible] கண்ட முதியோர் [illegible]னர்,

# கமக்காரர் சங்கம்

### மயிலிட்டிக் கோவிற்பற்றில் நிர்மாணம்

நிகழும் விய ஷு ஆனிமீ 15-ந் திகதி (29-6-46) சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் யாழ்ப்பாணம் சைவாசிரியகலாசாலைப் பிரதம ஆசிரியர் திரு. சி. சுவாமிநாதன் B A. அவர்கள் தலைமையில் மயிலிட்டிக் கிராமச் சங்க எல்லைக்குட்பட்ட கமக்காரரின் கூட்டமொன்று ஆரம்பமாயிற்று.

ஆரம்பத்தில் மயிலிட்டிக் கிராமச் சங்கத் தலைவரும், ஈழகேசரி அதிபருமாகிய திரு நா. பொன்னையா அவர்களாலும், திரு. க. பொன்னம்பலம், திரு. சி. கார்த்திகேசு என்பவர்களாலும் கமக்காரரின் தேவைகள் என்னும் விஷயம்பற்றிய குறிப்புக்கள் கூறப்பட்டன. பின்னர் மயிலிட்டிக் கிராமச்சங்க எல்லைக்குட்பட்ட கமக்காரரின் நலன்களைக் கவனிப்பதற்கு ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், "மயிலிட்டிக் கோவிற்பற்றுக் கமக்காரர் சங்கம்" எனப் பெயரிடப்பட வேண்டுமென்றும், கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுச் சபையார் யாவராலும் அங்கீகரிக்கப்படலாயின.

கீழ்க் காணப்படுவோர் குறித்த கமக்காரர் சங்க உத்தியோகத்தர்களாகச் சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. பொன்னையா அவர்கள், உபதலைவர்: திரு. சி சுவாமிநாதன் B A. அவர்கள், காரியதரிசி: திரு. க. பொன்னம்பலம் அவர்கள், தனாதிகாரி: திரு. சீ. வைத்தியலிங்கம் அவர்கள். இவர்களுடன் 17 நிர்வாக சபை யங்கத்தவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

"மயிலிட்டிக் கிராமச்சங்க எல்லைக்குட்பட்ட கமக்காரரின் தேவைக்காக, காங்கேசன்துறை(பலாலி)யுத்த விமானப்பகுதியிலுள்ள மின்சாரயந்திரத்தை அரசாங்கத்தார் விலைக்கு வாங்கித் தனித்தனி கிணறுகளில் "மோட்டோரும் பம்பும்" வைத்துத் தண்ணீர் இறைப்பதற்குவசதிசெய்து தரவேண்டும். ஷை மின்சார யந்திரத்தைப் பெறமுடியாவிட்டால், ஓர் மத்திய மின்சார நீர் இறைப்பு நிலையத்தை அரசாங்கத்தார் புதிதாக அமைத்துத் தரல்வேண்டும்" என்னும் ஓர் தீர்மானத்தைச் சபை நிறைவேற்றியது —கடிதம்.

### தேகவியோகம்

குமாரி விஜயலக்ஷ்மி

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியருள் ஒருவரான திரு S இளையதம்பி அவர்களின் புத்திரியும் ஷை கல்லூரியில் முகாமைக்காரராக விருந்த டக்ரர் V. வல்லிபுரம் அவர்களின் பௌத்திரியுமாகிய குமாரி விஜயலக்ஷ்மி சென்ற 1-7-46 இல் அகால மரணமடைந்தார் என்னும் துக்கசமாசாரத்தை அறியலானேம். இக்கன்னிகையின் அகால மரணத்தினல் துயருறும் பெற்றார் பந்துக்களுக்கு எமது அநுதாபம் உரியதாகுக.

தானவரவு

ஷை கன்னிகையின் மரணக்கிரியையின்போது சைவபரிபாலனசபைக்குத் தானமாக வரித்தனுபபிய ரூபா 1 பெற்றும்.

### மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் உற்சவத்தை முன்னிட்டு 4-7-46 தொடக்கம் 28-7-46வரை, மாவிட்டபுரத்திலே, புகைரதம் தங்கும் இடத்தில் கொழும்புப் புகைரதங்களைத் தவிர்ந்த ஏனைய புகைரதங்கள் யாவும் தங்கி ஜனங்களை ஏற்றவும இறக்கவும் புகைரதப் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப் படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள் தற் கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் எற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச செய்யபபட்டு இக்காலத்தில் அதிக மாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவை களே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில ஏமாந்து நட்டப்படாதீர்கள்

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்
Misc. 250—19-3-46—19-9-46) .(செ) 1888-ம் ஆண்டு முதல்.



## தந்தரோகசஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
### சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத் தாவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46



## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங் கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல் லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருமுத்தல் விலை ரூபா 25
அரைமுத்தலுக்கு ரூபா 12-50
கால்முத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis.25 23-4 46 to 22-3-47)



## தேவை

கொட்டைக்காடு ஐக்கிய பண்டக சாலைக்கு ஓர் மனேஜர் தேவை. விரும்புவோர் ஆடி 15ந் திகதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பவும், தெரியப்படுபவர் ரூபா 500 பிணைகட்டவேண்டும், ரூபா 50 வேதனங் கொடுக்கப்படும்.

வே. ஞானத்துரை,
காரியதரிசி,
அராலிமேற்கு, வட்டுக்கோட்டை.
Mis 104 9. 12


## விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் ஜூலை 10

காலை: 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சாரதா அனந்தராமன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 எஸ் ஜி கிட்டப்பா இசைத்தட்டு 8-20 கே ஆர் செல்லமுத்து பாட்டு 9 முடிவு

1 கச்சேரம் 1.30 அங்கிலத்தில் செய்திகள 1-40 கே ஆர் செல்லமுத்து பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே ஆர் செல்லமுத்து பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 மன்னார்குடி எஸ் நாகநாதய்யர் பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் வானிலை 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கைப்பொருள் பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 சாரதா அனந்தராமன் பாட்டு 8.30 மன்னார்குடி எஸ் நாகநாதய்யர் பாட்டு 9 அங்கிலத்தில் செய்திகள 9.15 ஆங்கில நிகழ்ச்சி 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு

### வியாழன் யூலை 11

காலை 7-15 கிராரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருவாரூர் சுப்ரமணிய தேசிகர் பாட்டு 8 ஆங்கலத்தில் செய்திகள் 8-15 சித்ரகானம இசைத்தட்டு 8-30 எம் கே கனகாம்பாள் வீணை 9 முடிவு.

1 கச்சேரம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எம் கே கனகாமபாள் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 எம் கே கனகாம்பாள் வீணை 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 திருவாரூர் சுப்ரமணிய தேசிகர் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 புதிய வெளியீடுகள் 7-15 இலக்கிய வாசகம் 7 30 தமிழில் செய்திகள் 7-45 கரூர் சின்னசாமி ஐயர் வயலின் 9 ஆங்கிலத்தல் செய்திகள 9-15 குற்றவாளி யார் நாடகம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 முக்கூடல் பள்ளு பாடல்கள் 10 இசை வேளை இசைத்தட்டு 10-30 முடிவு

### வெள்ளி ஜூலை 12

காலை: 7-15 கிதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள 7-30 கே கோச்சமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 எஸ் கே ரங்கய்யா பாகவதர் பாட்டு 9 முடிவு

1 சதம் 1-30 அங்கிலத்தில் செய்திகள 1.40 ஏ ஆர் சேஷையன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஏ ஆர் தேவநாதன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 கே கோச்சமணி பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள வானிலை 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 செய்திவிளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 திருவீழிமிழலை சகோதரர்கள நாதஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் பாலகிருஷ்ணன் வயோலா 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 உலக வைரங்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

## அணுக் குண்டுகளால் 120000 பேர் மரணம்

ஜப்பானிய யுத்தத்தின் கடைசிப் பகுதியில் அமெரிக்கர் வீசிய இரு அணுக் குண்டுகளினுலும், 120000 பேர் மரணமடைந்தார் என்றும் 65000 பேர் காயமுற்றனர் என்றும் இப்போது [illegible] யான ஓர் அறிக்கை [illegible]





எங்கும்
கியாதிபெற்ற
எமது
ரேடியோ பீடிகளையே
எப்பொழுதும்
உபயோகித்து
ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)



## வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்
## அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்
### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

அயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
Mis 154 29-11-45—30-11(தி) புறக்கோட்டை, கொழும்பு.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday July, 9, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org